செ.வெ.எண்:24 நாள்:12.01.2018

# அரியலூர் மாவட்டத்தில் நடமாடும் சிகிச்சை வாகனம் மூலம் மாற்றுத்திறனாளி குழந்தைகள் சிகிச்சை பெறலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனத்தில் 0 முதல் 6 வயது வரையிலான மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்பு சிகிச்சை வாகனம் மாவட்டம் தோறும் செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் சிகிச்சை வாகனத்தில் இயன்முறை சிகிச்சை, உதவி உபகரண கருவிகள், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் நுண்ணறிவினை அதிகரிக்கும் வகையிலான பொருட்கள், காது கேளாத மற்றும் வாய்பேசாத குழந்தைகளுக்கு விளக்கப்படங்கள் மற்றும் பொருட்கள் மூலம் பேச்சு பயிற்சி அளிக்கும் சாதனங்கள் மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான முடநீக்கு சாதனங்கள் மதிப்பீடு செய்யும் வகையில் நடமாடும் சிகிச்சை வாகனம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப கால பயிற்சி மையங்களுக்கு வர இயலாத மாற்றுத்திறனாளி குழந்தைகளின் இடங்களுக்கு சென்று அவர்களை மதிப்பீடு செய்வதற்கும் பயிற்சிகள் வழங்கிடவும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பான முழுவிவரங்கள் அடங்கிய தட்டுகள் மற்றும் தேவையான விவரப்பலகைகளையும் விண்ணப்பங்களையும் கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்திலுள்ள 6 வட்டாரத்திற்கும் வாரம் இரண்டு தினங்கள் (செவ்வாய் மற்றும் வியாழன்) நடமாடும் சிகிச்சை வாகனம் 18.01.2018 அன்று செந்துறை வட்டார வள மையத்திலும், 23.01.2018 அன்று தா.பழூர் வட்டார வள மையத்திலும், 25.01.2018 அன்று ஜெயங்கொண்டம் வட்டார வள மையத்திலும், 30.01.2018 அன்று திருமானூர் வட்டார வள மையத்திலும், 01.02.2018 அன்று அரியலூர் வட்டார வள மையத்திலும், 06.02.2018 அன்று ஆண்டிமடம் வட்டார வள மையத்திலும் வருகை புரிய உள்ளதையொட்டி 0 முதல் 6 வயது வரையிலான மனவளர்ச்சி குறையுடைய, தசைசிதைவு நோயால் பாதிக்கப்பட்ட செவித்திறன் குறையுடைய, பார்வை குறைவுடைய, மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகள் நேரில் அழைத்து வரப்பட்டு வந்து நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனத்தின் மூலமாக பயன்பெறுமாறு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.